
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 6 | டிசம்பர் 1993 | இதழ் 12



வெளியிடுவோர் :

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : , மணல்மேடு வீதி, ஈரோடு-638 002 (ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : பகல் 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 5-30—6-30...திருமறை ஆய்வு & கலந்துரையாடல்

வியாழன் : மாலை 7-15—8-30...வேத ஆய்வுவகுப்புகள்

வெள்ளி : மாலை 7-00—9-00...ஜெப ஆராதனை

## இதழின் உள்ளே


1. "நீ போ இனிப்பாவஞ் செய்யாதே" 1
2. கட்டளைகளும், முன்னுதாரணங்களும் 7
3. "தேவையிலிருப்போருக்கு உதவினாள்" 11
4. நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே! 13
5. கிறிஸ்தவனுக்கு எது அழகு? 15
6. பிரிவு சபை எதிலும் ஒருபோதும் அங்கம் வகிக்காமல் நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக இருக்க முடியும் 16
7. நம்பிக்கை 17
8. அவர்கள் உங்கள் கதவைத் தட்டும் போது.... 22
9. இச்சை அடக்கம் 26
10. மன நிறைவு 27

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 6 DECEMBER—1993 Issue 12

**ஆசிரியவுரை**

## "நீ போ இனிப் பாவஞ் செய்யாதே"

வைத்தியனாகிய லூக்கா, தனது நற்செய்தி நூலில் இயேசுவை **மனிதகுமாரனாக** எடுத்துக்காட்டும் பொழுது, யோவான் ஆசிரியர், கிறிஸ்து ராஜாவை தெய்வீகத் தன்மை நிறைந்த **தேவகுமாரனாக** சித்தரிக்கிறார். ஆம், யோவான் நற்செய்தி நூலில், கிறிஸ்துவானவர் தன்னை "நானே" என இயம்புவது, ஏழு இடங்களில் இடம் பெற்றுள்ளது. "நானே ஜீவ அப்பம்" (6:35) "நானே உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" (8:12), "நானே வாசல்" (10:9) "நானே நல்ல மேய்ப்பன்" (10:11) "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" (11:25) "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" (14:6) "நான் மெய்யான திராட்சைச் செடி" (15:1). வெளிப்படுத்தப்பட்டுள்ள இந்த "நானே" க்கள், இயேசுக்கிறிஸ்துவின் தெய்வீகத்தை வெளிப்படுத்தும் அப்பட்டமான சான்றுகளாகும்.

இந்த யோவான் புத்தகத்தில் தான் "**நீ போ இனிப்பாவஞ் செய்யாதே**" என்ற வசனத்தைக் காண்கிறோம் (8:11) யோவான் ஐந்தாம் அதிகாரம் தொடங்கி, வசனங்களைக் கூர்ந்து வாசிப்போமானால், பல கோணங்களில் இருந்து கிறிஸ்துவுக்கு யூதர்கள் மத்தியில் பெருகி வரும் எதிர்ப்பைக் கவனிக்க முடியும். எப்படியாவது கிறிஸ்துவைப் "பொறியில்" சிக்க வைக்கவேண்டுமென

சனகரீம் சங்கத்து அதிகாரிகள், வேதபாரகர், பரிசேயர் போன்றவர்கள் கடுமையாக முயற்சிக்கின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் "ஜீவ அப்பம் நானே" என்று கிறிஸ்து வெளிப்படுத்துகிறார். அத்தோடு நில்லாமல், "இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றும் பிழைப்பான்" என்றும் சொல்கிறார். (வ. 48,51) கிறிஸ்துவின் இந்த வார்த்தைகள் யூதர்களுக்கு மத்தியில் சலசலப்பை உண்டு பண்ணியது (வ. 52). இது கடினமான உபதேசம் என சீஷர்கள் அநேகரைப் பின்வாங்கிப் போகவும் செய்தது (6: 60,66). கிறிஸ்துவின் சகோதரர்கள் கூட அவர் மீது அவநம்பிக்கைப்பட்ட நேரம் (7:3—5) இத்தருணத்தை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்த எண்ணிய கிறிஸ்துவின் எதிரிகளான பரிசேயரும், பிரதான ஆசாரியரும், அவரைக் கைது செய்துவர சேவகரை அனுப்பினர் (7:32). அவருடைய பேச்சின் வல்லமையை உணர்ந்த சேவகர், அவர் மீது கைபோட துணிவில்லாமல் வெறுங்கையோடு திரும்பி வந்தனர் (7:45). இந்த முயற்சி தோல்வியடையவே, அடுத்த கட்டத்திற்கு தயாராகின்றனர்.

இயேசுக்கிறிஸ்து ஒலிவமலையிலிருந்து திரும்பி வந்த ஒரு காலைப் பொழுதில்தேவாலயத்திற்கு வருகிறார். (யோவான் 8:1) ஒலிவமலை என்பது எருசலேமுக்குக் கிழக்கே, மார்த்தாள், மரியாள், லாசரு ஆகியவர்களின் ஊராகிய பெத்தானியாவுக்குச் செல்லும் வழியில், கிட்டத்தட்ட ஒய்வு நாள் பிரயாண தூரத்தில் இருந்த இடம், காலை வேளையிலேயே பெருந்திரளான கூட்டம். எல்லோருமே கிறிஸ்துவின் தெய்வீகம் நிறைந்த பிரசங்கங்களைக் கேட்டு பக்திப் பரவசம் அடையலாம் என வந்தவர்கள் அல்ல இவர்களில் குற்றம் கண்டு பிடிக்க வந்தவர்கள் கணிசமான பகுதியினராக இருந்திருக்க வேண்டும். ஆகவே தான் உபதேசத்தை முழுமையாகக் கேட்க மனமில்லாமல், ஒரு கபட நாடகம் போடுகின்றனர்.

இம்முறை கிறிஸ்துவின் விரோதிகள் ஒரு தெளிவான திட்டத்துடன் வந்திருந்தனர். இனித் தப்பிக்க வழியில்லை. நாம் விரித்த சதி வலையில் சிக்கியே ஆக வேண்டும் என்ற நம்பிக்கையுடன் வந்திருந்தனர். ஆம், வேதபாரகரும், பரிசேயரும் விபச்சாரத்தில் கையும், மெய்யுமாய் பிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயைக் கொண்டு வந்து அவர் முன் நிறுத்தினர். ஆனால், இவளோடு விபச்சாரம் செய்த மனிதன் என்ன ஆனான் என்று தெரியவில்லை. மோசேயின் பிரமாணம் இருவரும் தண்டிக்கப்பட வேண்டுமென்றே சொல்கிறது (உப. 22:22) ஆக,. இந்த மத மோசடிக்காரர்களுக்கு, மோசேயின் பிரமாணம் மீறப்படக்கூடாது என்பது பற்றியோ,

தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்பது பற்றியோ, அக்கறையில்லை. எப்படியாவது இயேசுக்கிறிஸ்துவிடம் குற்றம் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்பதே. அவர்கள் உள்ளத்தில் பதுக்கி வைத்திருக்கும் **தீயநோக்கம்** தெளிவாகவே தெரிகிறது.

ஒருவேளை, அழைத்து வந்தவர்களுக்கு வேதவாக்கியங்களில் சரியான பரிச்சயம் இல்லை என்றும் சொல்லவாய்ப்பில்லை. ஏனெனில் அவர்கள் வேதபாரகர், பரிசேயர். வேதபாரகர் மோசேயின் பழைய பிரமாணங்களை நகல் எடுக்கும் தொழில் செய்தவர்கள், ஆகவே ஒவ்வொரு பிரமாணத்தைப் பற்றியும் தெளிவு இவர்களுக்கு இருந்திருக்க வேண்டும். ஒரு குற்றத்திற்கு சட்டத்தின் நிலை என்னவென்று நிச்சயம் இவர்களுக்குத் தெரியாமல் இருந்திருக்காது. அடுத்து பரிசேயர்கள், மோசேயின் பிரமாணங்களை தலைமேல் தூக்கிவைத்து ஆடியவர்கள். இவர்கள் அதைக் கரைத்துக் குடித்து, துல்லியமாக பிரமாணத்தைக் கடைப் பிடிக்கிறோம் எனறு சுயநீதி பேசித் திரிந்தவர்கள்.

கிறிஸ்துவின் போதனைகள், சமுதாயத்தில் தங்களுக்கிருந்த மரியாதையைக் குழிதோண்டிப் புதைத்துவிடுமோ என்ற பயம். அந்தப் பயம் பரிசாகத் தந்த எரிச்சல். எரிச்சலின் விளைவுதான் கிறிஸ்துவைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றும் தீவிர முயற்சி.

தங்கள் பொய்யான உதடுகளினால், **போதகரே** என்ற மெய்யான வார்த்தையை சிரமப்பட்டு வரவழைத்து (8:4), விபசாரத்தில் பிடிக்கப்பட்ட ஸ்திரீயைக் குறித்து, **''நீர் என்ன சொல்லுகிறீர்''** என்றார்கள் (8:5) ஏதோ இயேசுக்கிறிஸ்து சொன்ன எல்லாவற்றையும் செய்துவிட்டதைப் போலும், இந்தப் பிரச்சனைக்கும் அவர் சொல்வதையே செய்வோம் என்பதைப் போலவும் நடிக்கின்றனர். இந்தப் போலி மதத்தலைவர்களின் வஞ்சக விளையாட்டு, கிறிஸ்துவுக்குத் தெரியாமலா போய்விடும். **அவர் தான் மனுஷருள்ளத்திலிருப்பதை அறியும் சக்தி நிறைந்தவராயிற்றே** (யோவா 2:25)

இந்தப் பொய்ப் பக்திக்காரர்கள், கிறிஸ்துவை வசமாகச் சிக்கவைத்துவிட்டோமென்ற மன திருப்தியோடு, அவர் வாயின் வார்த்தைக்காகக் காத்துக் கிடக்கின்றனர். ஏனெனில் என்ன பதில் வந்தாலும், அவர் குற்றவாளியாகத் தீர்க்கப்படுவது நிச்சயம் என்பது இவர்கள் கணிப்பு. அவள், கல்லெறியப்படக்கூடாது என்று சொல்லியிருந்தால், அவர் மீது, மோசேயின் பிரமாணத்தை மீறிய

குற்றம் சாட்டப்பட்டிருக்கும். அதன் மூலம் மக்கள் மத்தியில் அவர் மீதிருந்த நம்பிக்கை பெருமளவு குறையும். மாறாக, கல்லெறியுங்கள் என்று சொல்லியிருந்தால், ரோமச்சட்டத்தின்படி, 'கொலைக் குற்றம்' சாட்டப்பட்டிருக்கும். என்ன அற்புதமான திட்டம்! அவர்கள் பெருமளவு எதிர்பார்த்தது, மோசேயின் பிரமாணத்தை மீறுவார்என்று தான்,

இந்த மாய்மாலக்காரர்களின் இதய நினைவை அறிந்த இயேசு குனிந்து தரையில் எழுதி **மௌனம்** என்ற பதிலைக் கொடுக்கிறார். இக்கட்டான ஒரு வேளையில் மௌனம் என்பது தொன்று தொட்டு வரும் நமது கலாச்சாரத்தின் ஓர் அங்கமே இயேசுவின் மௌனத்தை இவர்கள் புரிந்து கொண்டாலும், அதை ஏற்றுக் கொள்ள மனமில்லாமல் நச்சரிக்கின்றனர். இப்பொழுது கிறிஸ்து, தன்னுடைய மௌனத்தைக் கலைகிறார். கிறிஸ்துவின் ஞானம் இங்கு வெளியாகிறது. பிரச்சனையை சட்ட ரீதியாக அணுகாமல் தார்மீக ரீதியாக, ஒழுக்க ரீதியாக அணுகுகிறார். நியாயப்பிரமாணத்தை சரியாகக் கடைப்பிடிக்க வேண்டிய நீங்கள் அப்படிச் செய்கிறீர்களா என்ற கேள்வியை நேரடியாக எழுப்பாமல், **''உங்களில் பாவமில்லாதவன் இவன்மேல் முதலாவது கல்லெறியக் கடவன்''** என்கிறார் ( 7) தாங்கள் விரித்த வலையில் தாங்களே சிக்கிக் கொண்டதை அறிந்த அந்த பாசாங்குக்காரர்கள், தப்பித்தால் போதுமென்று, பெரியோர் முதல் சிறியோர் வரை ஓடிவிடுகின்றனர் (வ. 9).

'இயேசு நிமிர்ந்து பார்த்து, ஸ்திரீயை நோக்கி வேறொருவரையும் காணாமல்' ஒருவனாகிலும் உம்மை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா என்றார் (வ 10). அதற்கு அவள் இல்லை ஆண்டவரே என்றாள். இயேசு அவளை நோக்கி நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; **''நீ போ இனிப் பாவஞ் செய்யாதே** என்றார்'' (வ. 11). நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லையென்பது, கடுமையான ஒரு பாவத்தை கிறிஸ்து பாராமுகமாக இருந்துவிட்டார் என்பதல்ல. மாறாக, **பாவிகளைத் தண்டிக்க அல்ல, இரட்சிக்கவே வந்தேன் என்பதைத் தான் கோடிட்டுக் காட்டுகிறார்.**

சரி, நாம் வருடத்தின் விளிம்பில் நின்றுகொண்டிருக்கிறோம். வாழ்த்துக்களும், பதில் வாழ்த்துக்களும் அலைமோதிக்கொண்டிருக்கும் காலம் இது. பரிசேயரும், வேதபாரகரும் வேடமணிந்து, மோசேயின் பிரமாணத்தின் மீது தங்களுக்கிருந்த பக்தியை வெளிக்

காட்ட முயற்சித்ததைப் போல, கிறிஸ்துவின் உபதேசங்கள், வேத வசனங்கள் ஆகியவைகளின் மீது, போதுமான நம்பிக்கை வைக்காமலேயே, கிறிஸ்து பெருமான் மீது, தங்களுக்கு அளவற்ற பக்தியும், மரியாதையும் இருப்பதை, உலகிற்கு எடுத்துக்காட்ட பெரும் முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் நாட்கள் இவை.

நாம், கட்டும் தோரணங்கள், போடும்கோஷங்கள், நடத்தும் ஊர்வலங்கள், செய்யும் வேடிக்கைகள் ஒருவேளை நம்முடைய பக்தியை சமுதாயத்திற்கு சத்தமாகச்சொல்லலாம். வேதபாரகரும் பரிசேயரும் அவர்கள்வெளிவேஷத்தால், சமுதாயத்தில் **மேன்மை தங்கியவர்களாகவே** இருந்தனர். ஆனால் கிறிஸ்துவிடம் வந்த பொழுது, அவர்கள் சாயம் வெளுத்தது என்பதை நாம் மறந்து விடக்கூடாது தப்பித்தால் போதுமென்றுதான் ஓட்டம்பிடித்தனர். நாமும் கூட நம்முடைய பக்தியை ஒழுங்குபடுத்தி **வேதவசனம் சொல்லுகிறபடி**, மெய்க்கிறிஸ்தவவாழ்க்கை வாழாவிட்டால், நியாயத்தீர்ப்பில் நமது சுயரூபம் ஒரு நாளில் வெளிப்படும். (யோவா 12:48) கிறிஸ்துவை நாம் ஒருபோதும் ஏமாற்ற முடியாது.

அன்பானவர்களே! இந்த ஆண்டின் இறுதி நாட்களில் நான் உங்களோடு பகிர்ந்துகொள்ள ஆசைப்படும் வாக்கியம்''.... **நீ போ இனிப்பாவஞ் செய்யாதே**'' என்பதாகும். கர்த்தர் நமக்கு இரக்கங்காட்டி அனுமதியளித்தால் ஒரு புதிய ஆண்டிற்குள்ளாக பிரவேசிக்க உள்ளோம் இந்த வேளையில், நமதாண்டவர் அந்த ஸ்திரீயிடம் சொன்ன இந்த எச்சரிப்பின் வார்த்தைகளை சிந்தித்துப் பார்ப்போம். ஒவ்வொரு நாளும் பாவத்தின் வஞ்சனையில் உழன்று கொண்டிருக்கும் நமக்கு கிறிஸ்து சொன்ன வார்த்தைகள் மிகவும் பொருத்தமானதாகவே உள்ளது.

இயேசுக்கிறிஸ்து, அப்பெண்ணின் பழைய பாவங்களைக் குறித்துப்பேசாமல் இப்பொழுது முதற்கொண்டு புதிய மனுஷியாக வாழ்க்கை நடத்து என்கிறார். நம்முடைய பிதாவாகிய தேவனும் இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துவும், இதை வாசிக்கும் நம் ஒவ்வொருவரிடமிருந்தும் எதிர்பார்ப்பது அது தான் கடந்த காலத்தின், குறிப்பாக கடந்த வருடத்தின் பாவங்களிருந்து விடுபட்டு, பாவமில்லாத ஒரு வாழ்வை, கிறிஸ்து விரும்பும் ஒரு வாழ்வை, வேதம் விவரிக்கும் ஒரு வாழ்வை, பரிசுத்தமான வாழ்வை, நாம் ஒவ்வொருவரும் வாழவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். நாம் ஆயத்தமா?

பாவிகளை இரட்சிக்கத்தான் கிறிஸ்து பெருமான், மானிடரூபமெடுத்து, பூமிக்கு வந்தார். நம்முடைய பாவங்களுக்காகத்தான்,

சிலுவை மரத்தில் இரத்தம் சிந்தி, தன்னுயிர் கொடுத்தார். அந்த ஒப்பற்ற தேவமைந்தனின் பிள்ளைகள் என்று நாம் சொல்லிக் கொண்டு, இன்னும் பாவத்தில் வாழ்வது பரிதாபம் இல்லையா? தேவகுமாரனின் சிலுவை மரணத்தை அவமதிப்பதாகாதா?

நண்பரே! கொஞ்சம் சிந்தித்துப் பார்ப்போம். நாட்களும். வருடங்களும் கிருபையாய்க் கூட்டிக் கொடுக்கப்படுவதை அலட்சியம் செய்ய வேண்டாம். நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்கு கிறிஸ்து ஆவலோடு காத்துக்கொண்டுள்ளார். "வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே" நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் எனக்கூவி அழைக்கிறார் (மத்.11:28) வருடத்தின் இறுதியிலாகிலும், இவ்வழைப்பை ஏற்றுக்கொள்வோம்.

வேதம் வழிகாட்டுகிறபடி விசுவாசித்து (மாற்.16:16) மனந்திரும்பி (அப் 17:30) அறிக்கையிட்டு (ரோம 10:10) பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் (அப். 2:33) பெற்றுக்கொள்வோம். புதிய சிருஷ்டியாக மாறி (2கொரி 5:17) புத்தாண்டில் பாவமில்லாமல் வாழ்வோம். இம்மைக்குரிய ஆசீர்வாதங்களோடு, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும்பெற்றுசமாதானத்தோடு பூமியின் நாட்களைக் கழிப்போம். கர்த்தர் உங்களோடிருந்து வழிநடத்துவாராக!

E.Z.S. ராஜநாயகம்

**தப்பாமல் கனி கொடுப்பவன் யார்?**

கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து. கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம்வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத் தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனிகொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான்? எரே 17:7,8.

# கட்டளைகளும், முன்னுதாரணங்களும்

பரிசுத்த வேதாகமம் தேவனுடைய கட்டளைகளால் நிறைந்திருக்கிறது. ஒரு மனிதனை சில காரியங்களைச் செய்யத் தூண்டும் படியான கட்டளைகளும், மற்றும் சில காரியங் களிலிருந்து விலகியிருக்கச் சொல்லும்படியான கட்டளைகளும் உண்டு. அவனியில் உள்ள அனைத்தையும், மனிதனையும் உண் டாக்கின தேவனுக்கு, இதுபோன்ற கட்டளைகளைக் கொடுக்க அதிகாரம் உண்டு. தன்னைப் படைத்தவரின் ஆசீர்வாதமும், அங் கீகாரமும் மனிதனுக்கு வேண்டுமெனில், அவர் கொடுத்த கட்டளைகளுக்குக் கீழ்படிவதைக் காட்டிலும், மனிதனுக்கு வேறு வழியில்லை.

தேவகட்டளைக்கு மனிதன் கீழ்ப்படிந்தான் என்பதற்கு, உதாரணங்கள் வேதாகமம் எங்கும் குவிந்து கிடக்கிறது. ஓரிடத் தில், தேவன், தன்னுடைய அறிவுரைகளை ஏற்றுச் செயல்படும் படியாக மனிதனிடம் சொல்வது, அடுத்து மனிதன் தன்னுடைய கீழ்ப்படிதலை நிறைவேற்றின சம்பவங்கள் என்று அடுத்தடுத்து மனிதனின் கீழ்ப்படிதலைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. தேவனுடைய கட்டளைகளும், முன்னுதாரணங்களும் வல்லமை நிறைந்தவைகள்.

இப்பொழுது, நாம் தேவனுடைய வார்த்தைகளுக்குச் சென்று இவைகள் எங்ஙனம் கிரியை செய்கிறது என்று காண்போம் பிரதான கட்டளையில் இயேசுக்கிறிஸ்து அப்போஸ் தலர்களிடம், நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று சொல்லி, ''விசுவாசமுள்ள வனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்'' என்றார். (மாற்கு 16:16) பிறகு, அப்போஸ்தலர் 2ம் அதி காரத்திற்கு வருவோமேயானால், பெந்தெகொஸ்தே நாளைக் காணமுடியும். அப்போஸ்தலர்கள் எருசலேம் பட்டணத்தில் கூடி வந்தார்கள். தங்களை சகல சத்தியத்திற்குள்ளாகவும், நடத்தும் படியாக பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டார்கள். முக்கியமான பண்டிகைகளில் ஒன்றானடியால், பெருந்திரளான யூதர்கள் உலகெங்கிலுமிருந்து அங்கு கூடி வந்திருந்தார்கள். இப்படிப்பட்டதான ஒரு மகத்தான நாளைத் தான், முதன்முதலாக மனுக்குலத்துக்கு நற்செய்தியைப் போதிக்

கும் நாளாக, அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் தங்களுக்கு அருளப்பட்ட சிறந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, கிறிஸ்துவின் வாழ்க்கை, அற்புதங்கள், மரணம், அடக்கம். உயிர்த்தெழுதல், பரலோகத்திற்கு ஏறிப்போனது என அனைத்தையும் போதித்தனர். இருதயத்தின் எண்ணங்களைத் தட்டி எழுப்பின, அனல் மூட்டும் ஒரு பிரசங்கத்தைத் தங்கள்சொந்த மொழியில் கேட்டபின், இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று ஏற்றுக்கொண்ட பெருந்திரளான மக்கள், பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து, சகோதரரே! நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று வினவினார். "பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள் என்றார். (அப். 2:38) தொடர்ந்து நாம் வாசிப்போமானால், "அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய 3000 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்" (அப்போஸ்தலர் 2:41) என்று சொல்லப்பட்டுள்ளது.

மேற்சொன்ன இந்த முன்னுதாரணம் தவிர, நற்செய்தியின் போதனைகளின் மூலம் கிடைத்த கட்டளைகளுக்குக் கீழ்படிந்து மனமாற்றப்பட்டதற்கு பத்து உதாரணங்கள் அப்போஸ்தலர்களின் நடபடிகளில் உண்டு. அப். 8ம் அதிகாரத்தில் நாம் காணும் எத்தியோப்பிய மந்திரியின் மனமாற்றம் ஒரு மிகச்சிறந்த, எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய ஒன்று. தேவனுடைய ஆவியால் ஏவப்பட்டு, வானாந்திரத்திற்குபோய், மந்திரியைச் சந்தித்த பிலிப்புவைக்காண முடியும். மந்திரிக்கு நற்செய்தியைப் போதிக்கும் வாய்ப்பை பெற்ற பிலிப்பு, மந்திரியோடு சேர்ந்து தொடர்ந்து பிரயாணம் செய்கையில், தண்ணீரைக் கண்டு, இதோ தண்ணீர் இருக்கிறதே நான் ஞானஸ்நானம் பெறுவதற்கு தடை என்ன என்று கேட்கிறான். இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று, நீர் முழு இருதயத்தோடு விசுவாசித்தால் தடையில்லை என பிலிப்புவிடம் இருந்து பதில் வந்தது. விசுவாசிக்கிறேன் என்று சொல்லி இரதத்தை நிறுத்தச் சொன்னான். இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு, மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்புவைக் கொண்டுபோய்விட்டார். மந்திரி சந்தோஷத்தோடே தன் வழியே போனான்.

மனமாற்றம் அடைந்தவர்களின் பட்டியலை, நாம் ஊன்றிப் படித்து, கூர்ந்து கவனித்தால். சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. ஜனங்கள் கேட்கிறார்கள், விசுவாசிக்கிறார்கள், பாவங்களை விட்டு மனந்திரும்புகிறார்கள், இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிடுகிறார்கள். பிறகு தண்ணீரில் முழுகி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்கிறார்கள் என்று **இந்த வரிசையில் தான்**, எல்லா சந்தர்ப்பங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

அதே சுவிஷேத்திற்குத் தான், இன்றைக்கு வாழ்கின்ற நாமும் கீழ்ப்படிய வேண்டுமேன்று வேதம் எதிர்பார்க்கிறபடியால் அப்போஸ்தலர் நடபடிகளில், மனமாற்றம் அடைந்தவர்களைப்போல், நாமும் கீழ்ப்படிவோமானால், அவர்களைப் போலவே நாமும் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும், அவர்கள் சேர்க்கப்பட்ட அதே சபையிலே நாமும் சேர்க்கப்பட முடியும். அந்தச் சபைதான் கர்த்தருடைய சபை அல்லது கிறிஸ்துவின் சபை இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் (அப். 2:47) என்று சொல்கிற சபை, கர்த்தருடைய சபைதான். ஒருவன் வேறுவிதமாகச் செய்யத் துணிந்து, இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளலாம் என நம்பினால், அது எங்ஙனம் முடியும்? உண்மையாகவே இரட்சிப்பைப் பெற்று பரலோகம் செல்ல வேண்டும் என விரும்பும் ஒருவன், **தேவ கட்டளைக்கு விரோதமாகவோ, கொடுக்கப்பட்டிருக்கும் முன்னுதாரணத்திற்கு** மாறாகவோ செய்யமாட்டான்.

தேவன், தன்னுடைய பிள்ளைகளாகிய கிறிஸ்தவர்களுக்கு வாரத்தின் முதல் நாளிலே கூடி, கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளவும், ஆராதனையின் மற்ற அம்சங்களில் பங்கு பெறவும் வேண்டும் எனக் கட்டளையிட்டிருக்கிறார். வாரத்தின் முதல் நாளிலே நாம் கர்த்தருக்குக் காணிக்கை கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறோம் (1 கொரி 16:2) மேலும் அப். 20:7ல் சீஷர்கள் ஆராதனைக்காகக் கூடி வந்தார்கள் என்று காண்கிறோம். வசனம் இவ்விதமாகச் சொல்கிறது. "வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறு நாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம் பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான் மத்தேயு எழுதின சுவிசேஷம் 26:26-28, கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட கர்த்தருடைய பந்திக்கும், அப். 20:7ல் சொல்லப்பட்டிருப்பதற்கும் தொடர்பு உண்டு. கர்த்தருடைய பந்தியின் அதி முக்கியத்துவத்தை

வலியுறுத்தும்படியாக, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேதாகமத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கும் ஆராதனையின் மற்ற அம்சங்களிலும், அப்பொழுது அவர்கள் பங்கு பெற்றே இருப்பார்கள், ஜெபம் செய்வது (அப். 2:42) பிரசங்கிப்பது (அப். 20:7) தேவனைத் துதித்துப் பாடுவது (எபே 5:19) தங்களுடைய வருமானத்திலிருந்து கர்த்தருக்குக் கொடுப்பது (1 கொரி 16:2) ஆகிய இவை அனைத்தும் ஆராதனையில் அடக்கம். வாரத்தின் முதல் நாளிலே சீஷர்கள் ஆராதனைக்காகக் கூடிவந்தார்கள் என்று மீண்டும் நமக்கு ஒரு முன்னுதாரணம் கிடைத்துள்ளது. எந்த நாளிலே ஆராதனைக்காக கூடி வர வேண்டுமென்பதற்கு இது ஒரு அருமையான சான்று.

இன்னும், அநேக தேவ கட்டளைகளையும், அவைகள் எங்கு எப்படி நிறைவேற்றப்பட்டன என்கிற முன்னுதாரணங்களையும் மிகுதியாய்க் காட்ட முடியும். கட்டளைகளும், முன் உதாரணங்களும், ஆதிக் கிறிஸ்தவர்களைப்போலவே நாமும் கீழ்படிய வேண்டும் அல்லது செய்யவேண்டுமென்று நமக்குப் போதிக்கிறது. கட்டளையும், முன்மாதிரியும் நமக்கு இருக்கும் பொழுது, அந்த மாதிரியைப் பின்பற்ற கர்த்தரின் அதிகாரமும், பக்கபலமும் நமக்கு உண்டு. ஆகவே, நாம் கீழ்ப்படிவதிலே ஞானமுள்ளவர்களாயிருப்போம்.

J C. சோட்

**உங்கள் சிந்தனைக்கு**

கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள் பிலிப்பியர் 4:8

**பெண்கள் பகுதி**

# "தேவையிலிருப்போருக்கு உதவினாள்"

குடும்பத்தில் உள்ள பெண்கள் வழக்கமாக சரீரத்தின் தேவைகளைக் கவனிப்பதிலும், அதேசமயம் ஆத்துமாக்களைப் பராமரிக்கின்ற பணியையும் செய்கிறபடியால் குடும்பத்திற்கு வெளியே, அவர்களுடைய உதவி தேவைப்படுகிறவர்களுக்கு நேசக் கரம் நீட்டும் அளவுக்கு தகுதி பெற்றுவிடுகின்றனர். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற ஒரு வாஞ்சையும் விருப்பமுமே கிறிஸ்துவத்தின் அதிமுக்கியமான அம்சமாகும்.

அப் 9:36-39 வசனப் பகுதிகளில் முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு கிறிஸ்தவ பெண்ணைப் பற்றி நாம் காணமுடியும். யோப்பா பட்டணத்தில் கிரேக்கப் பாஷையிலே தொற்காள் என்று அர்த்தம்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள். அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்தாள்.

அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரணம் அடைந்த பொழுது, அவளைக் குளிப்பாட்டி மேல் வீட்டிலே வைத்திருந்தார்கள்.

யோப்பா பட்டணம் லித்தா ஊருக்குச் சமீபமானபடியினாலே, பேதுரு அவ்விடத்தில் இருக்கிறானென்று சீஷர்கள் கேள்விப்பட்டு, தாமதமில்லாமல் தங்களிடத்தில் வரவேண்டுமென்று சொல்லும்படி இரண்டு மனுஷரை அவனிடத்திற்கு அனுப்பினார்கள்.

பேதுரு எழுந்து, அவர்களுடனே கூடப் போனார். அவர் போய்ச் சேர்ந்த பொழுது, அவர்கள் அவனை மேல் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போனார்கள். அப்பொழுது விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனே கூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து "அவனைச் சூழ்ந்து நின்றார்கள்".

சில சமயங்களில், கிறிஸ்தவப் பெண்கள் கர்த்தருக்காக சேவை செய்வதில் தாங்கள் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக நினைக்கிறார்கள். பொதுவாக ஆண்கள் கூடிவந்திருக்கும் பொழுது

பெண்கள் தலைமை ஏற்பது அனுமதிக்கப்படாத ஒன்று என்று வேதவாக்கியத்தினால் நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம். ''சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள். பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை. அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும். வேதமும் அப்படியே சொல்லுகிறது'', [1 கொரிந்தியர் 14:34]. ஸ்திரீகளுக்கான மேலும் ஒரு உபதேசத்தை I தீமோத்தேயு 2 ம் அதிகாரம் 12 முதல் 14 வரை உள்ள வசனப்பகுதி இவ்வாறாக விளக்குகிறது. ''உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை. அவள் அமைதலாயிருக்க வேண்டும். என்னத்தினாலெனில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்''.

வேதாகமம் இப்படி போதிக்கிறபடியால் பெண்கள் செய்யக் கூடிய வேலை ஏதுவுமே இல்லையென்பது இதன் பொருள் அல்ல. நற்கிரியைகளையும், தான தருமங்களையும் செய்துவந்த ஒரு சிறந்த பெண்மணி என வேதாகமம் தொற்காளை விவரித்துச் சொல்கிறது. அவள் மரித்துப் போன செய்தியைக் கேட்டு பேதுரு அங்கு வந்து சேர்ந்தபொழுது, கூடியிருந்த விதவைகள் தொற்காள், தங்களுடனே கூட இருக்கையில் தைத்துக் கொடுத்த அங்கிகளையும், வஸ்திரங்களையும் காண்பித்தார்கள்.

துணிகளை தைத்து இல்லாதவர்கட்கு கொடுப்பதில் தொற்காளின் திறமை வெளிப்படையாகவே தெரிகிறது. சபையிலே குறைவிலும், தரித்திரத்திலும் இருந்த விதவைகளைக் கண்டபோது தன்னிடத்திலுள்ளதைக் கொண்டு அவர்களுக்கு உதவி செய்தாள்'

இந்த அர்த்தத்தை மனதில் வைத்துத்தான் மத் 25:14-30-ல் தாலந்தைக் குறித்தான உவமையைக் கிறிஸ்து சொல்கிறார். ஒவ்வொரு மனிதனும் சில தனிப்பட்ட தாலந்துகளினால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறான். சிலருக்கு மற்றவர்களைவிட கூடுதலாக ஆசீர்வாதங்கள் உண்டு என்று சொல்கிறார். தேவன் கொடுத்துள்ள தாலந்துகளை நாம் உபயோகிக்க வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். நாம் அவ்வாறு செய்யும் பொழுது தேவன் நம்முடைய தாலந்துகளோடு இன்னுமதிகமான ஆசீர்வாதங்களை சேர்த்து, நம் வாழ்நாட்காலத்தில் இன்னும் அதிகமான நன்மை செய்கிற மக்களாக நம்மை மாற்றுவார்.

சிலர் ஒருவேளை மருத்துவத்துறையில் பயிற்சி பெற்று டாக்டர்களாகவும், தாதிகளாகவும் இருப்பவர்கள். தங்கள் திறமையை தொழில் ரீதியாக மட்டும் காட்டாமல், சகோதரிகளுக்குள் வியாதியாயிருப்பவர்களுக்கு ஒரு கிறிஸ்தவ சேவை, அல்லது உதவி புரிந்து தங்கள் திறனை பயன்படுத்தலாம் ஒரு குடும்பத்தில் தாய்க்கு உடல்நலமில்லையென்று வைத்துக் கொள்வோம். கிறிஸ்தவ சகோதரிகள் அக்குடும்பத்தில், குடும்பத்தாருக்கு உணவு சமைத்தல், வீட்டைச் சுத்தம் செய்தல், துவைத்தல், குழந்தைகளை பராமரித்தல் போன்ற உதவிகளைச் செய்யலாம். வயோதியர்களுக்கும், நோயாளிகளுக்கும் ஆறுதல் அளிக்கும் வகையில் தாம் நேரில் சென்று விசாரித்து வரலாம். மேலும் வயதானவர்களுக்கும், வாசிக்க முடியாதவர்களுக்கும் நாம் வேதத்தை படித்துக்காட்டி தேவனுடைய காரியங்களை விளக்கிக்காட்டலாம்.

வாலிப சகோதரிகளை சபையின் காரியங்களில் பங்கு கொள்ளும் வகையில், திட்டங்கள் தீட்டும் வேலையை பெண்களும், தாய்மார்களும் சேர்ந்து செய்யலாம். ஒவ்வொரு குடும்பத்தையும் உண்மையான அன்புக்கும், விருந்தோம்பலுக்கும் ஏற்ற இடமாக பெண்களால் மாற்ற முடியும். கிறிஸ்துவை அறியாதவர்கட்கு அவ்வன்பை அனுபவிக்கும்படியாகச் செய்ய முடியும். கிறிஸ்தவப் பெண்களாகிய நாம் தொற்காளைப் போல நம்முடைய தாலந்துகளை உபயோகிக்க திறமைகளையும் வாய்ப்புகளையும் பெற்றிருக்கிறோம். அவைகளை தேவனுடைய நாமத்தின் மகிமைக்காக பயன்படுத்த தேவன் நமக்கு உதவி செய்வாராக!.

BETTY COATE — RACHEL NAYAGAM

## நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே!

நாம் இவ்வருட இறுதியில் இருக்கிறோம். தேவனுடைய ஆசீர்வாதமும், அவருடைய கிருபையும் பெற்ற நாம் அவருக்கு நன்றி கூற வேண்டும். எத்தனையோ தேவ பிள்ளைகளும், தேவ ஊழியக்காரர்களும் இவ்வருட துவக்கத்தில் இருந்தவர்கள் இறுதியில் இல்லை! வியாதி, வெள்ளம், புயல், பூகம்பம் இவைகளினால் மரணத்தை ருசிபார்த்து நம்மைவிட்டு பிரிந்து விட்டனர். நாம் இவ்வருட இறுதியில் இருக்கிறோம்! இதற்கு காரணம் என்ன? நாம் மரித்தவரைக் காட்டிலும் மேலானவர்களா? இல்ல வே இல்லை! கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் பாக்கியவான்களாக இருக்கிறார்கள் (பிரசங்கி 4:2, வெளி 14:13)

நாம் உயிருடன் இருப்பது தேவனுடைய கிருபையே! அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. (புலம்பல் 3:22) ஆகையால் தேவகிருபையையும் அவருடைய இரக்கத்தையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். நினைப்பதற்கு நேரமில்லை என்று சொல்கிறவர்களும் நம்மில் இருக்கிறார்கள். ஜீவனையும், ஆரோக்கியத்தையும் அளித்து நமக்கு போதுமான நேரத்தையும் கொடுக்கிற தேவனுக்கு 'நேரமில்லை' என்று போக்குச் சொல்லாமல் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம் (எபி 13:15) ஏனெனில் நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே!

நம்முடைய வாழ் நாட்கள் விரைவாக ஓடுகிறது. அஞ்சற்காரர் ஓட்டத்திலும் தீவிரமாய் ஓடுகிறது. (யோபு 9;25) வருடத்தில் ஒன்று கூடுகிறது. ஆனால் நம்முடைய வாழ்காலத்தில் ஒன்று குறைகிறது என்று நினைக்க வேண்டும்! எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிந்தாலும் அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே. அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது, நாங்களும் பறந்து போகிறோம். (சங்கீதம் 90:10) என்கிற வேதவாக்கியத்தின்படி நமது ஆயுட் காலம் இருக்கிறபடியால், எஞ்சியிருக்கிற வாழ்நாளில் தேவனைத் தேடுவோம். தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கு கர்த்தர் நல்லவர் (புலம்பல் 3;25) அவரைத் தேடும்படிக்கு அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே! நாம் அவருக்குள் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம். (அப். 17:27, 28) இந்த உலகத்தை அவர் சிருஷ்டித்து நாம் குடியிருக்கும்படி எல்லைகளையும் குறித்துக் கொடுத்து நம்மை வழிநடத்தி வருகிற தேவனைத் தேடக்கடவோம். வெளிப்புறமான செயல்களான பண்டிகையின் மூலமாகவோ, பாரம்பரிய வழிபாட்டு முறைகளின்படியாகவோ தேவனை தேடுவது முறையல்ல! உங்கள் வஸ்திரத்தை அல்ல இருதயத்தையே கிழித்து திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (யோவேல் 2:13) ஆகையால், இவ்வருட இறுதியில் இருக்கிற நாம் தேவனுடைய கிருபையை விருதாவாக்காமல் உள்ளான இருதயத்தோடு தேவனைத் தேடுவோம்! ஏனெனில், நாம் நிர்மூலமாக திருக்கிறது அவருடைய கிருபையே!

எதிர்வரும் புத்தாண்டில் தேவனுடைய கிருபையையும், இரக்கத்தையும் பெற இன்றே கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியுங்கள்! தேவன் உங்களை எல்லா பயத்திற்கும் நீங்கலாக்கி இரட்சிப்பார். (சங்கீதம் 34:4).

கே. பாஸ்கர்
கோவில்பட்டி.

# கிறிஸ்தவனுக்கு எது அழகு?

மனிதனுக்கு அன்பு அழகு
அன்புக்கு சந்தோஷம் அழகு
சந்தோஷத்திற்கு சமாதானம் அழகு
சமாதானத்திற்கு நீடிய பொறுமை அழகு
நீடிய பொறுமைக்கு தயவு அழகு
தயவுக்கு நற்குணம் அழகு
நற்குணத்திற்கு விசுவாசம் அழகு
விசுவாசத்திற்கு சாந்தம் அழகு
சாந்தத்திற்கு இச்சையடக்கம் அழகு
இவையாவும் கிறிஸ்துவின் அழகு
கிறிஸ்துவுக்கு சுவிசேஷம் அழகு
சுவிசேஷத்திற்கு கேள்விப்படுதல் அழகு
கேள்விப்படுதலுக்கு விசுவாசம் அழகு
விசுவாசத்திற்கு மனம்திரும்புதல் அழகு
மனம் திரும்புதலுக்கு அறிக்கை அழகு
அறிக்கைக்கு ஞானஸ்நானம் அழகு
ஞானஸ்நானத்திற்கு முழுக்குதல் அழகு
முழுக்குதல் இரட்சிப்பின் அழகு
இரட்சிப்பே பாவிக்கு அழகு
இவையாவும் கிறிஸ்தவனுக்கு அழகு
கிறிஸ்தவனுக்கு ஜீவகிரீடம் அழகு.

சகோ. செ. சேகர்
அத்திமாஞ்சேரி.

**ஆவியின் கனிகள்**

ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.

— கலாந்தியர் 5:22, 23

# பிரிவு சபை எதிலும் ஒருபோதும் அங்கம் வகிக்காமல் நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக இருக்க முடியும்

நீங்கள் ஒரு பிரிவினை சபையிலும் சேராமல், அல்லது மனிதனுடைய கட்டளைக்குக் கட்டுப்படாமல், அல்லது 'சர்வ அதிகாரம்' படைத்த ஒரு மனித மதத்தலைவனை ஏற்றுக் கொள்ளாமல், நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக இருக்க முடியும் என்றோ, நமது கர்த்தரின் சபையில் அங்கத்தினராக முடியும் என்றோ, உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நித்திய ஜீவன் உங்களுக்கு உறுதி அளிக்கப்படும் என்றோ உங்களுக்குத் தெரியுமா? இவ்வாறு நீங்கள் கிறிஸ்தவனாக இருக்க முடியும் என்பது மட்டுமல்ல; இவ்வாறு மட்டுமே நீங்கள் இருக்க வேண்டுமென்று நமது கர்த்தர் விரும்புகிறார்.

கிறிஸ்துவை அடையும் வழியைப் பற்றியும் அவர் அளிக்கும் இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றியும், புதிய ஏற்பாட்டைப் படிக்கும் பலர் இவ்வுலகில் எப்பகுதியில் இருப்பினும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்து கொள்ளுகிறார்கள். தேவனுடைய வசனமே ''விதை'' என்பதை இம்மக்கள் புரிந்து கொள்கின்றனர் (லூக்கா 8:11) முதலாவது நூற்றாண்டிலே, 'நீதியான நல்ல' இதயங்களில் போதிக்கப்பட்ட 'விதை' ஏற்றுக்கொள்ளப்பட்ட போது கிறிஸ்தவர்களை உருவாக்கியது போல, இந்த 20ம் நூற்றாண்டிலும் அது கிறிஸ்தவர்களை உருவாக்கும். வித்தியாசமான பல போட்டி பிரிவினை சபைக்குழுக்களை அனுமதிப்பதைத் தவிர்த்து, கர்த்தர் ஒரே சபையை நிறுவினார் என்பதையும், தனது சொந்த வசனத்தின் வழியாக அச்சபையை இன்றும் கூட வழி நடத்தி வருகிறார் என்பதையும் அவர்கள் காணுகிறார்கள்.

நற்செய்தியைக் கேட்கும் மக்கள், அதை விசுவாசித்து, தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவை அறிக்கை செய்து, ஞானஸ்நானம் பெறும்போது, கர்த்தர் அவர்களின் பாவங்களை மன்னித்து (மாற்கு 16;15, 16: அப்.2:38, ரோ.10:10; ரோமர் 6:3,4; அப்.22:16) தனது சபையில் சேர்த்துக் கொள்கிறார் (அப் 2:47 எபே.1:22,23) இந்தப் ''புதியப் பிறவிகள்''

(21-ம் பக்கம் பார்க்கவும்)

# நம்பிக்கை

ஒரு மனிதன் எதை இழந்து போனாலும், எவ்வளவு நஷ்டப்பட்டுப் போனாலும், என்ன அவமானத்திற்குள்ளாக்கப் பட்டாலும், நம்பிக்கையை இழக்காதிருக்கும் வரை அவனுக்கு ஒன்றும் பெரிதாக நேர்ந்து விடுவதில்லை. ஒரு மனிதனுக்கு நம்பிக்கை மட்டும் செத்துவிட்டால் எல்லாம் போய்விட்டது என்று தான் அர்த்தம். நம்பிக்கை இழந்தவன், நடை பிணத்தைப் போன்றவன்.

மனிதன் எவ்வளவோ காரியத்தின் மீது நம்பிக்கை வைத்து செயலாற்றுகிறான். என்னவெல்லாமோ மனக்கோட்டை கட்டுகிறான். ஆனால் அந்தோ! பரிதாபம்! ஒரு நொடியில் எல்லாம் இடிந்து ஒன்றுமில்லாமல் போகிறது. பிறகு உறவுமில்லை, பகையுமில்லை ஒன்றுமே இல்லை என்று கூறுமளவுக்கு வந்துவிடுகிறான். உடல் குன்றி உள்ளம் உடைந்து, செய்வதறியாது தன்னையே அழித்துக்கொள்ள முன் வருகிறான்.

இதைப் பார்த்து விட்டு இவையெல்லாம் கோழையின் செயல், வாழத் தெரியாதவன் என்று உடனடியாகக் கூறிவிடுகிறோம். நாம் அந்த நிலையில் உண்மையில் இருந்தால் தான் அதன் ஆழத்தை அறியமுடியும்.

வறண்டு போன வாழ்க்கை மலராதா? பாலைவனமாகிவிட்ட என் ஜீவியம் இனியும் மலர்ச் சோலையாகாதா? இருண்டு போன என் குடும்பத்தில் இனிமேலும் வெளிச்சம் வராதா? என்று ஏங்கித் தவிக்கும் எண்ணிலடங்காதோர் உள்ளத்தில் அணைந்து அணைந்து எரிந்து கொண்டிருக்கும் விளக்கைப் போன்று இருப்பது இந்த சிறு நம்பிக்கை தான். அதுவும் செத்துவிட்டால் அம் மனிதனின் கதி?

உலகத்தின் மீது நம்பிக்கை வைப்பதைக் காட்டிலும் உயிருள்ள தேவன் மீது நம்பிக்கை வைப்பது எவ்வளவு நலமாக தோன்றுகிறது. கர்த்தர் தம்மை நம்புகிறவர்களுக்கு என்ன செய்ய வல்லவராயிருக்கிறார் என்று தாவீது கூறுவதை கேளுங்கள் : ''கர்த்தருக்கு பயப்படுகிறவர்களே கர்த்தரை நம்புங்கள். அவரே அவர்களுக்கு துணையும் கேடகமுமாயிருக்கிறார். கர்த்தருக்கு பயப்படுகிற சிறியோரையும், பெரியோரையும் ஆசீர்வதிப்பார்'' *(சங்.115:11-13)*.

இனி எந்த அளவுக்கு கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று பார்ப்போம். ஞானி சாலமோன் கூறுகிறார், ''நீ உன் சுயபுத்தியின் மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள். அப்பொழுது அவர் உன் பாதைகளை செவ்வைபடுத்துவார். நீ உன்னை ஞானி என்று எண்ணாதே. கர்த்தருக்கு பயந்து தீமையை விட்டு விலகு'' (நீதி. 3,79). இந்த வசனங்களில், மூன்று காரியங்களை ஆராயலாம்.

1. **கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைக்க ஒருவன் தன் சுயபுத்தியின் மேல் சாயக்கூடாது.** அப்படி என்றால் எந்த எண்ணத்தையும் அவருக்குக் கீழாக்க வேண்டும். தன் சுய சித்தத்தின்படி செயலாற்றுகிறவனாக இருக்கக்கூடாது. சுயத்தின் மேல் சார்ந்திருப்பவன், தேவனிடத்தில் நம்பிக்கையுள்ளவனாக இருக்க முடியாது. எத்தனையோ பேர் கர்த்தரிடத்தில் நம்பிக்கையுள்ளவனாக இருக்க முடியாது. எத்தனையோ பேர் கர்த்தரிடத்தில் நம்பிக்கை உண்டு என்று கூறுவர் அது ஒருவேளை 50 சதவீதம் அல்லது 75 சதவீதமாக இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் ஏதேனும் பிரச்சனைக்குள்ளாக்கப்படும்போது கர்த்தரை விட்டு, சுயத்தின்மீது சார்ந்து விடுகின்றனர், அதெப்படி என்று நீங்கள் வினவலாம்.

கர்த்தரிடத்தில் நம்பிக்கை உள்ளவன் அவர் சித்தத்தை முழுமையாக செயலாற்ற எண்ணுவான். அளவுக்கு மீறிய துன்பம் வந்தாலும், அதைத் தாங்கி, கஷ்டத்திற்கு மத்தியிலும் பொறுமையோடு, அவர் வாக்குத்தத்தம் நிறைவேற காத்திருப்பான். தீமைக்கு தீமை, உதாசீனத்துக்கு உதாசீனத்தை சரிக்கட்டாமல் தீமையை நன்மையினால் வெல்லப் பார்ப்பான், பிறர் செய்யும் காரியங்களில் உண்மையான நோக்கத்தை அறியமுடியாத நிலையில், தான் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருந்தாலும், தேவன் எல்லாவற்றையும் காண்கிறவர் என்று அறிந்து, அவர் நியாயத்தீர்ப்புக்கு தன்னை ஒப்புவிப்பானே தவிர, பிறரை நியாயந்தீர்க்க மாட்டான்.

கர்த்தர் செய்த எல்லா உபகாரங்களையும் நினைத்து முதலில் அவருக்கும், இரண்டாவது யார் மூலமாக அந்த உதவி கிடைக்கப் பெற்றதோ அவருக்கும் நன்றியுள்ளவனாக இருப்பானேயல்லாமல், செய்நன்றிகொன்ற மகனாக இருக்கமாட்டான். கர்த்தரிடத்தில் பட்சபாதம் இல்லை என்றறிந்து, பழிவாங்குதல்

கர்த்தருக்குரியது என்று உணர்ந்து, தனக்கு இழைக்கப்பட்ட எல்லா தீங்கிட்கும், அவமானத்துக்கும் பழி வாங்காமல், நீதியைச் சரிகட்டுகிற தேவனிடத்தில் எல்லாவற்றையும் ஒப்புவித்து குற்ற- மற்றவனாக இருக்க முயற்சிப்பானே தவிர, தனக்கு ஒன்றும் நேராமலும், ஏதோ தீங்கு இழைக்கப்பட்டு விட்டதாக கற்பனை பண்ணிக்கொண்டு நல்லோரை பகைத்து, நல்ல நோக்கத்தை அழிக்க சந்தர்ப்பவாதிகளிடத்தில் செல்ல துணிய மாட்டான்.

தேவனுடைய சித்தத்தை விட்டுச் சென்று தேவனுடைய பிள்ளைகளால் ஒழுங்குபடுத்தப்படும் போது, இந்த சிட்சையை அற்பமாக எண்ணாமல், தவறை விட்டு மனந்திருந்தி, நல்மனச்- சாட்சியோடு வாழ முயற்சிப்பானேயல்லாமல், ஒழுங்கை கற்பித்- தவர்களை அழிக்க பிசாசானவனின் கைக்கூலியாக இருக்க மாட்டான்.

**2. கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைத்திருப்பது என்பது முழு இருதயத்தோடும் கர்த்தரிடத்தில் நம்பிக்- கையோடிருத்தலைக் குறிக்கும்.** வெறும் இம்மைக்காக மாத்திரம் கடன் தொல்லை கஷ்டம், வியாதி போன்ற இவற்றிற்- காக மாத்திரம் ஒருவன் கிறிஸ்துவினிடத்தில் நம்பிக்கை வைத்- திருந்தால் அவன் பரிதபிக்கப்படத்தக்கவன் என்கிறார் பவுல் (1 கொரி. 15,19). மறுமைக்காகவும் கர்த்தரிடத்தில் நம்பிக்கை- யுடன் இருக்க வேண்டும்.

இவ்வுலகத்தில் நாம் படும் துன்பங்கள் தொலைந்தாலும் சரி, தொலையாவிட்டாலும் சரி, நமக்கு வந்த வியாதி குணப்- பட்டாலும் சரி, குணப்படாவிட்டாலும் சரி, நிந்தை அவமானம் துடைக்கப்பட்டாலும் சரி, துடைக்கப்படாவிட்டாலும் சரி, பாவம் இல்லாத நாடு பிரச்சனை இல்லாத ராஜ்ஜியம், அந்த நித்திய வீடாம் பரலோகத்தில், நீடித்த நாட்களாய் சந்தோஷத்தோடு இருப்போம் என்று எண்ணி அங்கு செல்ல வாஞ்சித்து, அவர் சித்தத்திற்கு ஒப்பு கொடுத்தவனாக இவ்வுலகில் ஜீவிப்பவனே உண்மையில் தேவனிடத்தில் நம்பிக்கை வைத்திருப்பவன்.

இது வெறும் மூட நம்பிக்கை அல்ல, இதற்காகத்தானே கிறிஸ்துவும் நமக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்- தெழுந்தார். அவர் வருகையில் நாமும் உயிர்த்தெழுந்து அவருடன் என்றென்றும் தங்கி இருக்கும் உன்னத சிலாக்கியத்தைக் கொடுத்- திருக்கிறார், கிறிஸ்து உயிர்த்தெழுந்தது உண்மையானால், ஆம்!

அது சரித்திர பூர்வமாக நிரூபிக்கப்பட்ட உண்மை, நாம் இந்த நம்பிக்கைக்கு பாத்திரர்களாக இருப்போம்.

3. **அடுத்தபடியாக, கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைத்திருப்பது என்றால் தீமையை விட்டு விலகுவதாகும்.** மனிதன் நன்மை, தீமை அறிகிற அறிவை உடையவனாக இருக்க தேவன் விரும்பவில்லை ஆகையால் ஏதேன் தோட்டத்தில் தேவனால் முதலில் படைக்கப்பட்ட ஆதாம் ஏவாளைப் பார்த்து, ''இந்த தோட்டத்திலுள்ள நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம்'' என்று தேவன் கட்டளையிட்டார்.

ஆனால் அவர்கள் தேவனுடைய கட்டளையை மீறினார்கள், நன்மை தீமை அறிகிற அறிவை உடையவர்களாக மாறினர். ஆதாமுக்குள் நம்மில் ஒவ்வொருவனும் அந்த அறிவை உடையவனாக இருக்கிறோம். சிறு குழந்தைகளாக இருக்கும்வரை இதனால் ஒன்றும் பாதிப்புவராது, பொறுப்பேற்கும் பருவம் அடையும் போது, இந்த அறிவை பயன்படுத்துகிறோம். எப்போதும் நன்மையே தேர்ந்தெடுக்க மாட்டோம், தீமையையும் தேர்ந்தெடுப்போம், இதுவே நம்மை பிரச்சனைகளுக்குள்ளாக்குகிறது.

அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும் என்று வேதம் சொல்லுகிறது.

இந்த நிலையை மாற்றி மனிதன் தன்னைத் தானே ரட்சிக்க முடியாது' கிறிஸ்து ஒருவரே ரட்சிக்க வல்லவர். அவரை ஏற்றுகொண்டு அவருக்குள் ஜீவிப்பதே ஒரு நம்பிக்கையுள்ள ஜீவியம்.

அப்படி என்றால் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட மாத்திரத்தில் எல்லா கடன் தொல்லையும் நீங்கி, எல்லா வியாதியிலிருந்து குணமாகி எல்லா பிரச்சனைகளிலிருந்தும் விடுதலையாக்கப்பட்டு, குழப்பமில்லாமல் நிம்மதியோடு இருப்பீர்கள் என்று கூறி உங்களை ஏமாற்ற நான் தயாராக இல்லை.

நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன். ஆனாலும் நீங்கள் கிறிஸ்துவின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்து அவருக்குள் ஜீவித்தால் தான் நிம்மதி. அதுவும் துன்பத்திற்கு மத்தியில் தான். அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதா-

யிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்'' என்று வேதம் கூறுகிறது. (2 தீமோ. 3:12). கிறிஸ்து கொடுக்கும் சமாதானம், பிரச்சனைகளுக்கு மத்தியில், குழப்பங்களுக்கு மத்தியில், வியாதியின் கொடூரத்தில் காணும் இன்பம், உள்ளான மனச்சாந்தி அந்த நம்பிக்கைக்கு பாத்திரமான ஒருவர் இயேசுவே.

அன்பான சகோதரனே, சகோதரியே, நீ அவரை அண்டிக்கொள், அவருடைய சித்தத்திற்கு கீழ்படி, அவர் ஒருபோதும் உன்னைக்கைவிடார்.

எழுதியவர் : **பி. ஆர். எஸ்**

((16-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர் (அப். 11:26, 1 பேதுரு 4:16) அவர்களுடைய எல்லா செயலிலும் ஆராதனையிலும், புதிய ஏற்பாட்டில் கர்த்தர் வெளிப்படுத்திய வசனத்தின்படி அவர்கள் வழி நடத்தப்படுகின்றனர் (2 தீமோ 3:16, 17)

மேலே விளக்கப்பட்ட குணநலன்களைப்பெற்ற ஒரு குழுவே கிறிஸ்துவின் சபையின் ஒவ்வொரு பிராந்திய சபையாகும், நற்செய்தியில் காணப்படும் கர்த்தரின் எளிய கட்டளைகளை தங்கள் இதயப்பூர்வமாக அவர்கள் ஏற்று, கீழ்ப்படிகின்றனர். அவர்களை தனது சபையில் கர்த்தர் சேர்த்துக் கொள்கிறார் என்ற உத்திரவாதம் அவர்களுக்கு உண்டு. அவர்கள் எந்த பிரிவினை சபையையும் சார்ந்தவர்கள் அல்ல. மத சம்மந்தப்பட்ட மனிதச் சட்டங்கள் எவற்றிற்கும் அவர்கள் அடிபணிபவர்கள் அல்ல. உலக மதத்தலைவர் என எந்த ஒரு மனிதனையும் அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை, புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்திற்கு சகல மக்களும் திரும்பிச் செல்ல வேண்டுமென்று லட்சோப லட்ச மக்களுடன் இணைந்து விண்ணப்பிக்கின்றனர். புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்ட நற்செய்திக்குக் கீழ்படிய உங்களை அவர்கள் வேண்டுகின்றனர், உங்கள் நிலை என்ன?

தமிழில்: **எஸ். எஸ். ராஜன்.**

# அவர்கள் உங்கள் கதவைத் தட்டும் போது...

## WHEN THEY KWOCK ON YOUR DOOR

பலதரப்பட்ட வித்தியாசமான மதப்பிரிவுகளைச் சார்ந்த குழுக்களின் பிரதிநிதிகள், சிறு சிறு கூட்டங்களாகப் பிரிந்து, பல வேளைகளில் கிறிஸ்தவர்களின் வீட்டுக் கதவுகளைத் தட்டி, தங்களின் குறிப்பிட்ட பிரிவு சபை பற்றிப்பேச அனுமதி கேட்கும் அனுபவத்தைப் பெற்ற கிறிஸ்தவர்கள் இருக்கக்கூடும்.

அவ்வாறு உங்கள் வீட்டுக் கதவைத் தட்டும்போது, நீங்கள் என்ன செய்வீர்கள்? அவர்களை உள்ளே அனுமதிக்க மறுப்பீர்களா? அல்லது அவர்களை வீட்டுக்குள் அனுமதித்து, உபசரித்து உபதேசத்தைக் கேட்பீர்களா? இல்லையென்றால், வீட்டு வாசலிலே நின்றே அவர்களிடம் விவாதம் செய்வீர்களா? அவர்களிடம் பேசுவது வீண் பொழுது போக்கா? எந்த சக்தியுமே அவர்களை மாற்ற இயலாத 'கொள்கை உறுதி' படைத்தவர்கள் என்று எண்ணுகிறீர்களா?

கிறிஸ்தவர்களாகிய நீங்கள் பிறர் வீட்டுக் கதவைத் தட்டும் போது, ஏற்பட்ட அனுபவங்கள் யாவை?

இவ்வாறாக 'கதவைத்தட்டும்' பிரிவினை கூட்டத்தார் உங்கள் இல்லத்திற்கு வந்தால், நீங்கள் ஒரு வழியைக் கடைபிடிக்கலாம்; ''நாம் நம்புவதை நீங்கள் ஒரு பத்து நிமிடங்களுக்குக் கேட்க தயாராக இருந்தால், அடுத்து உங்கள் பேச்சையும் நான் அதே பத்து நிமிடங்களுக்கு கேட்க தயாராக இருக்கிறேன்'' என்று ஒரு நிபந்தனையை அவர்களிடம் அறிவியுங்கள். முற்றிலும் எதிர்பாராத உங்களின் இந்த நிபந்தனை அவர்களை கொஞ்சம் நிலைகுலைய வைக்கும். ஏனெனில் அவர்களின் சரக்கை உங்களிடம் இறக்குமதி செய்யத்தான் அவர்கள் வந்தார்களேயன்றி, உங்கள் பேச்சைக் கேட்க அல்ல!

ஒருவேளை, உங்கள் நிபந்தனையை அவர்கள் ஏற்றுக் கொண்டால், பத்து நிமிடங்களில் அவர்களிடம் கீழ்க்கண்டவற்றைப் போதிக்கலாம்.

1. வேதாகமம் கர்த்தருடைய வார்த்தை என்பதை நான் விசுவாசிக்கிறேன். ஏனெனில், ''பரிசுத்த வேத எழுத்துக்கள் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்கது; வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது;

தேவனுடைய மனிதன் தேறினவானகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது' நான் வேதாகமத்தை கர்த்தருடைய வசனம் என விசுவாசிப்பதால்....

2. ''நியாயப்பிரமாணத்தை மீறுகிறது பாவம்'' (1 யோ. 3:4) என்றும், ''எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாயினர்'' (ரோமர் 3:23) என்றும் நம்புகிறேன். அதன் விளைவாக, ''நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக் கொடுத்து'' விட்டபடியால், இறுதியில் ''பாவத்தின் சம்பளம் மரணம்'' என்பதையும் நம்புகிறேன் (ரோ 6:23)

3. பரிசுத்தமான தேவனின் சந்நிதானத்தில், நமது சொந்த முயற்சிகள் எவற்றாலும் நம்மால் நிற்க முடியாதபடி நாம் பாவிகளாக இருப்பதை நான் விசுவாசிக்கிறேன். ''நமது அக்கிரமங்களே நமது தேவனுக்கும் நமக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; நமது பாவங்களே அவர் நமக்கு செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை நமக்கு மறைக்கிறது'' (ஏசாயா59:2) எங்களுடைய அதிகமான நற்செயல்களால் ''எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல் இருக்கிறது'', (ஏசாயா 64:6)

4. ''அன்றியும் நான் பெலனற்றவர்களாயிருக்கும் போதே குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்'' என்பதை நான் விசுவாசிக்கிறேன். (ரோமர் 5:6) இச்செயலால் ''நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்'' (ரோ 5:8)

5. தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களை தமக்கு ஒப்புரவாக்கினார்'' என்பதையும், ''நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்'' (2 கொரி 5:19, 21).

6. தேவனின் இரட்சிப்பின் திட்டங்களுக்கு கீழ்ப்படிவதென்றால் நாம், ''பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் நமக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன்'' (ரோமர் 6:22).

7. ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' என்ற இயேசு கிறிஸ்துவின் உரிமையை நான் விசுவாசிக்கிறேன். (யோ. 14:6) அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்னர், இயேசு தனக்கு ''சகல அதிகாரமும்'' கொடுக்கப்பட்டிருப்பதையும், மக்களின் பாவமன்னிப்புக்கும் இரட்சிப்புக்கும் அவர் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளுமாறு, அப்போஸ்தலர்கள் உபதேசம் பண்ணவும் உத்திரவிட்டார் (மத்தேயு 28:18-20)

8. சிறிது நாட்களுக்குப்பின் (பெந்தெகொஸ்தே நாளில்) தங்களுக்கு இடப்பட்ட கட்டளையின்படியே கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் செய்தனர் என்பதை நான் நம்புகிறேன். ''கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுகிறவன் எவனோ அவன் இரட்சிக்கப்படுவான்'' (அப். 2:21) என அவர்கள் மக்களுக்குப் போதித்தனர். அப்போதனைகளைக் கேட்ட மக்கள், கிறிஸ்துவையும் அவருடைய நற்செய்தியையும் விசுவாசித்தால், ''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்'' (அப். 2:38) என அப்போஸ்தலர்கள் அவர்களுக்கு கட்டளையிட்டனர் கர்த்தரின் விருப்பப்படியே இது நடந்தது. பின்னர், நாம் புதிய ஏற்பாட்டில் காண்பதைப்போல, பிற பகுதி மக்களுக்கும் அதே போன்ற இரட்சிப்பின் திட்டம் வற்புறுத்தப்பட்டது.

9. ''இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்'' (அப். 2:47) என்பதை நான் நம்புகிறேன். தொடர்ந்து இவ்வாறாக சபையில் சேர்த்துக்கொண்டு வருகிறார்; ஏனெனில் இதே பாவமன்னிப்பும் இரட்சிப்பின் திட்டமும் உலக முடிவு பரியந்தம் தொடருகிறது. (மத்தேயு 28:20: யூதா 3)

10. புதிதாக எருசலேமில் நிறுவப்பட்ட சபையின் அங்கத்தினர்கள், ''அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோன்னியத்திலும் அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்'' (அப். 2:42) என்பதை நான் விசுவாசிக்கிறேன். நாம் புதிய ஏற்பாட்டைப் படிக்கும்போது, எல்லா பிராந்திய சபைகளும் ஒரே காரியத்தைப் போதிக்கவும்

நடத்தவும் எதிர்பார்க்கப்பட்டனர் என்பதைக் காண முடிகிறது. "நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்து வருகிற பிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை ஞாபகப்படுத்த" கொரிந்து சபை அங்கத்தினர்களிடம் தீமோத்தேயுவை தான் அனுப்பும்போது அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார்.

இறுதியாக, தனது அப்போஸ்தலர்கள் மூலமாக கிறிஸ்து எதைக் கட்டளையிட்டாரோ அவற்றை மக்கள் அவ்வாறே கடைபிடிக்கும்போது, அவர்கள் இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்துவால் அவருடைய சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்பதை நான் விசுவாசிக்கிறேன். அவ்வாறு சேர்க்கப்பட்டவர்கள் **கிறிஸ்துவின் சபையில் கிறிஸ்தவர்களாக மட்டுமே** இருக்கிறார்கள்.

தமிழில்: **எஸ். எஸ் ராஜன்.**

(28-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்மை ஆசீர்வதிப்பார். எனக்குப் பிடித்தமான ஒரு வேத பகுதியைக் கவனியுங்கள்," வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

நான் சாந்தமும், மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார். (மத். 11:28-30) பவுலடியார், தீமோத்தேயுவுக்குச் சொல்வதையும் கவனியுங்கள். "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை. இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம். ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும், கண்ணியிலும், மனுஷரை கேட்டிலும், அழிவிலும், அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்" (I தீமோத் 6:6-10).

நாம், கிறிஸ்துவைப் போலவும், அப்போஸ்தலர்களைப் போலவும் இருக்க அதிகதிகமாய் முயற்சி செய்வோம். பரலோக பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆசையோடு இப்பூமியில் வாழ்வோம்.

Jimmie N. Doss EZSR

# இச்சை அடக்கம்

''தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்'' என தேவனுடைய வசனம் திட்ட வட்டமாகக் கூறுகிறது. (கலா.6:8)

மாம்சத்திற்கென்று விதைக்கிறவர்கள் மாம்சத்தின் கிரியை களைச் செய்கின்றனர். (கலா.5:19-21) ஆனால் ஆவிக்கென்று விதைப்பவர்களோ ஆவியின்கனிகளை அறுப்பார்கள். அவையாவன: ''அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகியவை'' (கலா.5:22,23)

இச்சை அடக்கத்துடன் உள்ளவர்களுக்கு நமது கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்-குட்படும் பிரவேசம் பரிபூரணமாக அளிக்கப்படும். (2 பேருது 1:5-11)

அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். ''பந்தயச் சாலையில் ஓடுகிறவர்கள் எல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும் ஒருவனே பந்தயத் தைப் பெறுவான் என்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக் கொள்-ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய் கிறோம். ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகா யத்தை அடிக்கிறவனாக சிலம்பம் பண்ணேன். மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாத-படிக்கு, என் சாரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்''. (1 கொரி 9:24-27)

G F. ரெய்ன்ஸ்.

**ஜெபம் மறவாதே!**

இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்,
எல்லாவற்றிலேயும், ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்;
அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

I தெச. 5:17, 18

# மன நிறைவு

அப்போஸ்தலனாகிய பவுல் சிறையிலிருந்து எழுதின நான்கு நிருபங்களுள் ஒன்றான பிலிப்பியருக்கு எழுதும் பொழுது, ''என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாய் இருக்கக் கற்றுக் கொண்டேன்'' என்கிறார் (பிலிப் 4:11) நம்முடைய வாழ்க்கையில், இருப்பவைகளே போதமென்று நம்மில் எத்தனைபேர் சொல்ல முடியும்? மேலும், மேலும் உலகப் பொருள்களைச் சேர்க்க வேண்டுமென்றே ஒவ்வொருவரும் ஆசைப்படுகிறோம். ஆனால் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையோ எப்பொழுதும் ஒரே நிலையில் இருக்க, நிரந்தர அனுமதி கொடுத்து விடுகிறோம், ''நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை. நீங்கள் கொலை செய்தும், பொறாமை உள்ளவர்களாயிருந்தும், அடையக் கூடாமற் போகிறீர்கள்; நீங்கள் சண்டையும், யுத்தமும் பண்ணியும், நீங்கள் விண்ணப்பம் பண்ணாதிருக்கிறதினாலே உங்களுக்குச் சித்திக்கிறதில்லை. நீங்கள் விண்ணப்பம் பண்ணியும் உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி, செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள்'' (யாக். 4:2-3).

நான் ஒரு நல்ல கிறிஸ்தவனாகவும், சிறந்த கிறிஸ்தவனாக மற்றவர்களுக்கு, முன்மாதிரியாகவும் இருக்க வேண்டுமென்று தொடர்ந்து ஜெபித்து வருகிறேன், இதற்காக பவுல், என்னை பெலப்படுத்தி ஊக்குவிக்கிறார். அவருடைய எழுத்துக்களில் பக்திவைராக்கியத்தைக் குறித்தான அவருடைய அணுகுமுறை என்னை மிகுந்த ஆச்சரியத்திற்குள்ளாக்குகிறது. ஊழியத்தினிமித்தம் அவர் படாத பாடுகளில்லை. ஆனாலும், கர்த்தரைத் துதித்துக் கொண்டு, தொடர்ந்து ஊழியத்தைச் செய்கிறார்.

நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் மோசமான சூழ்நிலைகள், சோதனையான காலங்கள், சோர்ந்துபோகும் சந்தர்ப்பங்கள் வரும்போது, நாம் கிறிஸ்துவையும் அவருடைய அப்போஸ்தலர்களையும் நினைத்துக் கொள்ள வேண்டும். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு. நாம் தேவனையும், வசனங்களையும் நோக்கிப் பார்ப்போமானால், நம்முடைய பாடுகளுக்கு ஆறுதலையும், ஒத்தாசையையும் பெற்றுக் கொள்ள முடியும். பேதுரு ஆசிரியர் சொல்லும் பொழுது, ''அவர் உங்களை விசாரிக்கிறவரான படியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து

விடுங்கள்'' என்கிறார். (I பேதுரு 5:7) நம்முடைய தேவைகளுக்கு, நாம் ஜெபித்து ஆண்டவரிடம் கேட்டால், நம்மால் பெற்றுக் கொள்ள முடியும் என்று வசனங்கள் வலியுறுத்திச் சொல்கிறது. ''நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்கு செவி கொடுக்கிறாரென்பதே, அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால் அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம். (I யோவா 5:14-15) சில சமயங்களில் நாம் முட்டாள்தனமானவைகளைக் கேட்டு, அவை கிடைக்காத பொழுது நிலை குலைந்து விடுகிறோம். கேட்டது ஏன் நமக்கு கிடைக்கவில்லையென்பதைப் புரிந்து கொள்வதில்லை. முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் நீதியையும் தேடுவோமானால், நம்முடைய வாழ்க்கைக்குத் தேவையானவைகளைப் பெற்றுக் கொள்வோம் (மத் 6:33). நாம் ஒருபோதும் நாளைய தினத்தைக் குறித்து கவலைப்படத் தேவையில்லை. ஏனெனில் நாளைய தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். (மத் 6:34)

மனநிறைவு என்பது வாயிலிருந்தல்ல, சிந்தையிலிருந்து வரவேண்டும். அப்படிப்பட்ட மனநிறைவைத் தான் தேடிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று சொல்லியிருக்கிறாரே'' (எபி.13:5). நான் என்னுடைய சின்னச் சின்ன பிரச்சனைகளுக்காக மனம் வருந்துவதுண்டு. ஆனால், எவ்வளவோ பேர் சகிக்க முடியாத பாடுகளைப் படுகிறார்கள் என்று கேள்விப்பட்டு, நான் எவ்வளவாய் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டுமென உணருகிறேன்.

எங்களுடைய குழந்தைகள் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் உள்ளனர். எங்களுக்கு குடியிருக்க இடமும், உண்ண உணவும் உண்டு. ஆனால் இந்த அடிப்படைத் தேவைகள் அநேகருக்கு இல்லை. என் குடும்ப அங்கத்தினர்களுக்காகவும், நண்பர்களுக்காகவும் அன்றாடம் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். அவர்கள் யாவருக்கும் முன்மாதிரியான கிறிஸ்தவனாய் வாழ ஜெபிக்கிறேன்.

நாமனைவரும், வேதாகமத்தை அதிகமாய்ப் படித்து, அவைகளை நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும். நாம் வேதாகமத்தைத் திறந்து பார்த்தால், நம்முடைய அநேக காரியங்களுக்குத் தேவையான உதவியையும், ஆறுதலையும் கண்டுபிடிக்க முடியும். நாம் நல்ல கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்து, அநினிமித்தம் பாடுகளைப் பட்டால் கர்த்தர்

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Fridays - 7:45 to 8:00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi-11004.
Tuesdays-9 00 to 9:15 P. M.
Fridays- 9:00 to 9:15 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Tuesdays-2:00 to 2:15 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Sundays-6:45 to 7:00 P. M.
Thursdays-6:45 to 7:00 P.M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Fridays-3:15 to 3:30 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnaka
Box No 448, Bangalore 560004.
Sundays - 1:45 to 2:00 P.M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20. MM. ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/-மட்டுமே.

**வேண்டுவோர் தொடர்பு கொள்க!**

E.Z.S. ராஜநாயகம்
கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு,
காங்கயம்-638 701

**Published by Church of Christ Kangayam and Printed at Jeevasakthi Press, Erode.**
**Editor. E.Z.S. Rajanayagam**

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to :
The Editor
**THIRUMARAI AASAAN**
Post Box No. 27 KANGAYAM-638 701